# சித்திரை சொல்லும் செய்தி



*டாக்டர் சுப திண்ணப்பன்*



சித்திரை என்னும் சொல் தமிழ் மாதத்தையும், இருபத்தேழு நாண்மீன்களுள் (நட்சத்திரங்களில்) ஒன்றையும் குறிக்கும் என்னும் செய்தி தொல்காப்பியம் கூறும் “திங்களும் நாளும் முந்துகிளந்தன்ன” என்னும் நூற்பாவின் மூலம் உணரப்படும் ஒன்றாகும். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம். எனவே சித்திரை என்னும் சொல் அதன் இருபொருள் நிலையும் மூவாயிரம் ஆண்டுப் பழமை உடையவை என்பதை முதலில் நாம் உணர வேண்டும். மாதம் என்னும் நிலையில் சித்திரை என்பது இப்போது ஆண்டின் முதல் மாதமாகத் திகழும் சிறப்புடையது. நட்சத்திரம் என்னம் நிலையில் இருபத்தேழு நட்சத்திரங்களில் சித்திரை பதிநான்காவது நட்சத்திரம். எனவே நடுநாயகமாக விளங்கும் நல்லியல்புடையது. இது இலக்கணம் கூறும் செய்தி. இனி இலக்கியம் கூறும் செய்தியைக் காண்போம்.

சிலப்பதிகாரம் செந்தமிழில் தோன்றிய முதற் காப்பியம். கோவலன் கண்ணகி கதையைக்கூறும் காவியம். இதனைச் சேரன் தம்பி இளங்கோ அடிகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றினார். கோவலன் வாழ்ந்த இடம் பூம்புகார் நகரம். இது சோழநாட்டின் தலைநகரம். இங்கு அக்காலத்தில் இந்திரவிழா கொண்டாடப்பட்டது. அதனைக் குறிப்பிடும்போது “சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தெனத் தேவர்கோன் ஏவலிற்போந்த காவல் பூதம்” என்ற ஒன்றை இளங்கோஅடிகள் குறிப்பிடுகிறார். பூம்புகார் நகரம் மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இரு பகுதிகளைக் கொண்டது. இவ்விருபகுதிகளுக்கும் இடையேயுள்ள நாளங்காடிப் பகுதியில் காவல்பூதம் என்றொரு பூதம் இருந்ததாம். இப்பூதத்தைத் தேவர்தலைவனாகிய இந்திரன், சோழப் பேரரசனான முசுகுந்தன் என்பவன் முன்னொரு காலத்தில் துயருற்றபோது அவனைக் காப்பாற்றுவதற்காகச் சித்திரை மாதத்தில் சித்திரை நாளில் (நட்சத்திரத்தன்று) அனுப்பிவைத்தானாம். சிலப்பதிகாரத்தில் தான் முதன்முதலில் சித்திரை என்பது மாதம் நட்சத்திரம் இரண்டையும் குறிக்கும் நிலையில் கையாளப்பட்டிருக்கிறது.

சித்திரை மாதத்தில் சித்திரை நாளன்று நிறைமதி (பௌர்ணமி) நாளாகும். அந்த நாள் பூம்புகார் நகரமக்கள் அதுவும் குறிப்பாக அறக்குடி மகளிர் அந்தக் காவல் பூதம் இருந்த பலிபீடத்தின் அருகில் பூவும் புகையும் பொங்கலும் படைத்து, துணங்கைக் கூத்தும் குரவைக்கூத்தும் ஆடிப்,





பெருநிலமன்னன் ஆளும் நிலவுலகம் முழுவதும் “பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் (மழையும்) வளனும் சரக்க” என வாழ்த்தி வணங்கியதாகவும் இளங்கோஅடிகள் இந்திரவிழாவைப் பற்றிக் குறிப்பிடும்போது குறிப்பிடுகிறார். இனிப் பழமொழி பகரும் செய்தியைப் பார்ப்போம்.

“சித்திரை என்று சிறக்கிறது இல்லை, பங்குனி என்று பருக்கிறது இல்லை” என்பது ஒரு தமிழ்ப் பழமொழி. பழமொழி என்பது மக்கள் இலக்கியம். அனுபவ முதிர்ச்சியின் வெளிப்பாடு. “துன்பத்தைக் கண்டு துவளும் நிலையும் இல்லை, இன்பத்தைக் கண்டு எக்காளம் இடும் நிலையும் இல்லை” என்பதை உணர்த்தும் பழமொழி இது. மேலும் வேளாண் பெருமக்கள் சித்திரைக் கடப்பு, சித்திரைக் கார், சித்திரைக் காலி என்று நெல்வகைகளுக்குப் பெயரிட்டு வழங்கியுள்ளார்கள். பழந்தமிழ் மக்கள் ஆண்டிற்குரிய பருவத்தைக் கார், முதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று ஆறு வகைப்படுத்தினார்கள். அந்த அடிப்படையில் சித்திரை மாதம் இளவேனில் பருவத்தின் தொடக்க காலமாகும்.

சமய அடிப்படையில் பார்க்கும்போது சிவபெருமான், முருகன் ஆகிய கடவுளுக்குச் சித்திரை மாதத்துச் சித்திரா பௌர்ணமியில் விழாக் கொண்டாடப்படுகிறது. மதுரையில் சித்திரா பௌர்ணமி அன்று சித்திரைத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும் செய்தியை நாம் அறிவோம். அழகர் ஆற்றில் இறங்குவதும், சொக்கர் மீனாட்சி திருக்கல்யாணம் நடைபெறுவதும் இத்திருவிழாவின் சிறப்புகளாகும்.

முருகப்பெருமான் உறையும் தலங்களாகிய பழனி, திருச்செந்தூர், எட்டுகுடி முதலிய இடங்களில் சித்திரா பௌர்ணமிக்குக் காவடிகள் எடுப்பதும், பால்குடம் எடுப்பதும், அன்னதானம் செய்வதும் உண்டு.

புராண அடிப்படையில் கூற்றுவனாகிய இயமனின் கணக்கராகிய சித்திரகுப்தனையும் சித்திரா பௌர்ணமி அன்று வழிபடுகிறார்கள். பொங்கலிட்டு, இனிப்புப் பலகாரங்கள் செய்து படைத்துச் சித்திரகுப்தன் கதை படித்து வழிபாடு செய்வதை மரபாகத் தமிழ் நாட்டில் சில மரபினர் கொண்டிருக்கின்றனர்.

இறைவன் அடியார்கள் சிலருடைய குருபூசை நாள்களும் சித்திரை மாதத்தில் இடம் பெறுகின்றன. சைவ சமய நால்வரில் ஒருவராகிய திருநாவுக்கரசர் பெருமான் தேவாரப் பாடல்களைப் பாடியவர். “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்னும் குறிக்கொள் கொண்டவர். தொண்டுநெறிக்குத் தலைவர். அவர் திருப்புகலூரில் இறைவன் திருவடி அடைந்த நாள் சித்திரைச் சதய நன்னாள். தென்பாண்டி நாட்டினைச் சைவ நெறிக்கு மாற்றியவர் மங்கையர்க்கரசியார் என்னும்